# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 13.02.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

கடந்த குத்பாவில் நான் **இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம்** என்ற துஆ தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஞானம் மிகுந்த கூற்றின் வாயிலாக, இந்த துஆவில் மஸீஹ் மவ்வூதின் வருகை தொடர்பான முன்னறிவிப்பும், அந்த மஸீஹ் மவ்வூது முஹம்மதிய உம்மத்திலிருந்துதான் தோன்றுவார் என்ற முன்னறிவிப்பும், காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டளையும் உள்ளது. எனவே ஒவ்வொரு முஸ்லிமும் இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறினேன்.

முஸ்லிம்களின் பலவீனமான நிலை நீங்கி வலிமை பெறவும், முஸ்லிம் நாடுகளின கண்ணியமும், மரியாதையும் நிலைபெறுவதற்கு இது ஒன்றுதான் இப்போது வழியாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பின்படி வந்த இந்த இறை தூதரை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த உண்மையை இவர்கள் புரிந்து கொள்வதற்கான பாக்கியத்தை அல்லாஹ் இவர்களுக்கு வழங்குவானாக!

இந்த வசனம் தொடர்பாக இன்று நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நமது ஆன்மீக மற்றும் பௌதீக முன்னேற்றத்திற்காக காட்டித்தந்துள்ள வழிமுறைகளுள் சிலவற்றை உங்கள் முன் எடுத்துரைப்பேன். இந்த துஆவில் எவ்வளவு பரந்த கருத்துக்கள் அடங்கியுள்ளன. மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகு நமது பொறுப்புகள் என்ன? நமது குறிக்கோள் என்னவாக இருக்க வேண்டும். நமது முன்னேற்றத்திற்காகவும், சீர்திருத்தத்திற்காகவும் நாம் என்னென்ன செய்ய வேண்டும். நாம் இதற்காக எவ்வாறு துஆ செய்ய வேண்டும் என்பது போன்ற விஷயங்களை உங்களுக்கு எடுத்துரைக்கின்றேன்.

இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில மேற்கோள்களை வாசிப்பதற்கு முன் நன்றாக புரிந்து கொள்வதற்கு உங்களுக்கு சில விஷயங்களை கூற விரும்புகிறேன்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் **ஹுதா** என்ற அரபிச் சொல்லுக்கு பல அகராதிகளிலிருந்து பொருள் கூறியுள்ளார்கள். அதை முதலில் நான் உங்களுக்கு எடுத்துரைக்கிறேன். இதில் அவர்கள் மூன்று அம்சங்களை கூறுகிறார்கள். (i) வழி காட்டுதல் (ii) வழிவரை கொண்டு செல்வது (iii) போக வேண்டிய இடம் வரை கொண்டு செல்தல். வழி காட்டுதல், வழி வரை கொண்டு செல்தல் இவ்விரண்டும் வெளிப்படையாக பார்க்கும் போது ஒரே மாதிரி தெரிந்தாலும் இவ்விரண்டும் ஒன்று அல்ல. உதாரணமாக, இது இந்த இடத்திற்கு செல்லும் வழியாகும் என்று கூறி – வழியை மனிதன் தூரத்திலிருந்தும் காட்டி விடுகிறான். பிறகு வழிவரை கொண்டு செல்லுதல் என்பதன் பொருள் போக வேண்டிய இடம் வரை, செல்கின்ற வழி வரை கொண்டு விடுவது ஆகும். அந்த வழி, கூடவே சென்று போக வேண்டிய இடம் வரை உடன் செல்வது என்பது இதன் பொருள் ஆகும்.

திருக்குர்ஆனிலும் இது தொடர்பாக அல்லாஹ் பல வசனங்களில் நேர்வழி தொடர்பாக கூறியுள்ளான். **இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம்** என்ற துஆவில், நாம் இவ்வாறு துஆ செய்கிறோம். அதாவது எங்கள் இறைவா! நேர்மையின் பக்கம் கொண்டு செல்கின்ற நல்ல வழியை எங்களுக்கு காட்டுவாயாக! மேலும் நாங்கள் அதில் நடந்து அந்த நன்மையைப் பெறுவதற்கும் தவ்ஃபீக் வழங்குவாயாக! நேர்வழியை அடையாளம் கண்டு கொள்வது மட்டுமின்றி அதில் நடந்தவாறு நன்மையையும் நாங்கள் பெற வேண்டும். நாங்கள் இவ்வாறு எங்களது நோக்கததையும் நன்மையையும் பெற்ற பிறகு விரைவாக அடுத்த நன்மையைப் பெற முயற்சி செய்ய வேண்டும்.

எனவே, இந்த துஆவை செய்து விட்டு மனிதன் கைகட்டி சும்மா உட்கார்ந்து விட முடியாது. ஒரு மூஃமின் நிம்மதியாக அமர்ந்து விடமாட்டார். மாறாக, ஆன்மீகத்திலும் பௌதீகத்திலும் புதிய புதிய வெற்றியின்

பாதையில் முன்னேற முயற்சி செய்து கொண்டே இருப்பார். உலகியல் ரீதியில் நாம் எப்போதும் முன்னேற கடுமையாக முயற்சி செய்கிறோம். ஆனால், ஆன்மீகத்தில் இந்த அளவு முயற்சி செய்வதில்லை. எவ்வாறிருந்தபோதிலும், இந்த துஆவில் இருவகையான முயற்சியின் பக்கமும் கவனமூட்டப்பட்டுள்ளது. இரண்டாவதாக, இந்த துஆவில் துறவறத்தை மறுக்கும் கொள்கையும் இருக்கிறது. நாங்கள் உலகத்தை முற்றிலும் துறந்து விட்டோம் என்று சிலர் கூறுவர். இதற்கு இந்த துஆவில் மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் மனிதனை படைத்ததோடு தனது எண்ணற்ற அருட்கொடையையும் படைத்துள்ளான். அந்த அருட்கொடையைப் பெறுவதற்கு கட்டளையிடப்பட்டுள்ளது.

அல்லாஹ் மனிதனுக்காகவே அனைத்தையும் படைத்து மனிதனை **அஷ்ரஃபுல் மக்லூகாத்** – படைப்பினங்களுள் மிகச் சிறந்த படைப்பினம்) ஆக ஆக்கியுள்ளான். எனவே அந்த அருட்கொடைகளைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்த உலகத்தை முற்றிலும் துறந்து விடக்கூடாது. உலக அளவிலும் முன்னேற வேண்டும். ஆன்மீகத்திலும் முன்னேற வேண்டும். இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்கும் இது ஒரு சிறந்த துஆவாகும். நேர்வழியை அல்லாஹ் ஒருவனே தருகின்றான். அவன் தனது திருமறையில் இவ்வாறு கூறுகிறான். **இன்ன ஹுதல்லாஹி ஹுவல் ஹுதா** – நிச்சயமாக அல்லாஹ்வின் நேர்வழியே உண்மையான நேர்வழியாகும். எனவே, எந்த துறையில் நேர்வழி வேண்டுமென்றாலும் நீங்கள் அல்லாஹ்விடமே கேளுங்கள்.

**இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம்** – எங்களுக்கு நேரான வழியைக் காட்டுவாயாக! நாங்கள் வேண்டுகின்ற ஒவ்வொன்றிற்கும் உரிய பாதையின் பக்கம் எங்களை வழிநடத்துவாயாக! இதன் மூலம் நாங்கள் அதன்படி நடந்து அதை பெறுவது மட்டுமின்றி, அதை மிக விரைவில் அடையவும் வேண்டும்.

எனவே, இந்த துஆ முன்னேற்றத்தின் பக்கம் மனிதனுக்கு கவனமூட்டுகிறது. ஏனென்றால், இந்த துஆவோடு மனிதன் அல்லாஹ்விடம் இவ்வாறு வேண்டுகிறான். அதாவது இந்த வழியில் சென்று நான் எல்லா ஆகுமான வழியையும் கடைபிடித்து எனது நோக்கத்தை நான் அடைந்தவுடன் எனது அடுத்த நோக்கத்தின்பால் என்னை வழிநடத்துவாயாக! நேரம் வீணாகாமல் எனது அடுத்த நோக்கத்தையும் நான் அடைய முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு ஒரு நோக்கத்தை அடைந்த பிறகு இன்னொரு நோக்கத்தை நான் அடைந்து கொண்டே செல்ல வேண்டும்.

இங்கு நான் ஒரு விஷயத்தை விளக்க விரும்புகின்றேன். அல்லாஹ் நமக்கு **இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம்** என்ற துஆவை கற்றுத் தந்துள்ளான். அதாவது எங்களை சரியான வழியில் நடத்துவாயாக! மனிதன் தனது சுய முன்னேற்றத்திற்காக துஆ செய்கின்றான். ஆனால் ஒரு ஜமாஅத்தில் இணைந்த பிறகு நமது சிந்தனையும் போக்கும் ஜமாஅத்தை முன்வைத்திருக்க வேண்டும். எனவே, சுய பலவீனத்தை நாம் அகற்றுவதற்கும் நமக்கு உதவி கிடைக்கும். **இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம்** – எங்களை நேரான வழியிலும், வெற்றிக்குரிய வழியிலும், விரைவாக வெற்றி பெறுகின்ற வழியிலும் நடத்துவாயாக! இந்த சிந்தனையோடு துஆ செய்கின்ற போது மனிதன் தனது சுய பலவீனத்தை விட்டு விலகுகின்றான். அதோடு நான் ஜமாஅத்தின் ஒரு உறுப்பினர் என்ற முறையில் இதில் என்ன பங்கை நான் வகிக்கிறேன். எனது ஆன்மீகத்தை எந்த அளவு முன்னேற முயற்சி செய்துள்ளேன். படைப்பினத்திற்கு எந்த அளவு சேவை செய்ய முயற்சி செய்துள்ளேன் என்று சிந்திக்க வேண்டும். நாம் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்று அல்லாஹ்விடம் துஆ செய்கின்ற போது நமது காழ்ப்புணர்ச்சி எவ்வாறு நம்மிடம் இருக்கும். நாம் அனைவரும் இணைந்து இவ்வழியில் செல்ல வேண்டும். இந்த துஆ செய்கின்றபோது மனிதனுக்கு சுய பயனும் கிடைக்கின்றது. ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கும் முயற்சி செய்யும் வாய்ப்பு கிடைக்கும். நாம் நமது ஆன்மீக முன்னேற்றத்தை அடைவதற்கும் முயற்சி செய்தால், நமது அறிவு நிலையை உயர்த்துவதற்கும் முயற்சி செய்தால் அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப முன்னேற்றத்திற்கான நேர்வழியை நமக்குக் காட்டிக் கொண்டே இருப்பான்.

**அல்லாஹ் கூறுகிறான்:**

**வல்லதீனஹ் ததவ் ஸாதஹும் ஹுதா** – அதாவது நேர்வழி பெற்றவர்களை அல்லாஹ் மென்மேலும் நேர்வழியில் முன்னேறச் செய்கிறான். எனவே, நன்மையில் நிலைத்திருக்கவும், அல்லாஹ்விடம்

மேலும் மேலும் நேர்வழியை வேண்டிக் கொண்டிருப்பதால் மனிதனுக்கு சுய ஆன்மீக முன்னேற்றமும் கிடைக்கிறது. ஜமாஅத்தின் ஆன்மீக முன்னேற்றமும் கிடைக்கிறது. எல்லா விதமான பௌதீக முன்னேற்றமும் கிடைக்கும். எனவே, இந்த துஆ ஒரு சாதாரண துஆ இல்லை. இதை நாம் தொழுகையில் மீண்டும் மீண்டும் ஓதுகிறோம். ஒவ்வொரு தொழுகையின் ஒவ்வொரு ரக்அத்திலும் ஓதுகிறோம். இது உள்ளத்தின் ஆழத்திலிருந்து செய்யப்படும் துஆவாக இருந்தால் வெற்றியின் புதிய புதிய வழிகளை இது திறந்து கொண்டே செல்லும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த கருத்தை பல்வேறு இடங்களில் விளக்கிக் கூறியுள்ளார்கள். இந்த துஆ மக்களின் எல்லா துறைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்று இதைப் பற்றி விளக்கியவாறு கூறுகிறார்கள்.

**இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம்** என்ற துஆ மனிதனின் ஒவ்வொரு கோணலான தன்மையிலிருந்தும் காப்பாற்றுகிறது. மனிதனின் மீது இந்த துஆ உறுதியான மார்க்கமாகிய இஸ்லாத்தை வெளிப்படுத்துகிறது. மனிதனை பாழடைந்த வீட்டிலிருந்து வெளியேற்றி கனிகளும், மனமும் நிறைந்த தோட்டத்திற்கு அழைத்துச் செல்கிறது. இந்த துஆவை மிகவும் பணிவோடும் உருக்கத்தோடும் வேண்டுபவரை அல்லாஹ் நன்மையிலும், அருட்களிலும் முன்னேறச் செய்கிறான்.

**இன்னொரு இடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

ஒருமுறை ஒரு தொழுகையில் மட்டும் இந்த துஆவை ஓதினால் போதாது. மாறாக, இதை மீண்டும் மீண்டும் ஓதி வாருங்கள். அப்போதுதான் இதன் பொருள் முழுமையாக மனதில் பதியும். அல்லாஹ்வின் பால் இன்னும் அதிகமாக குனிவதற்கான நற்பாக்கியம் கிடைக்கும்.

இந்த துஆ ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக உள்ளத்திலிருந்து வேதனையோடு உருக்கமும் வெளிப்பட வேண்டும். துஆவின் மூலமாகத்தான் நபிமார்கள் அனைவரும் இறைநேசத்தைப் பெற்றார்கள். அந்த நபிமார்கள் தங்களது இறுதி மூச்சு வரை ஒரு நொடிப்பொழுது கூட துஆவை கைவிடவில்லை. இந்த துஆவில் கவனக்குறைவு காட்டுவதும், இந்த நோக்கத்திலிருந்து முகம் திருப்புவதும் யாருக்கும் ஏற்றதல்ல. ஏனெனில், நேர்வழியின் படித்தரங்கள் ஒருபோதும் முடிவடைவதில்லை. நபிமார்கள் கூட ஒரு படித்தரத்தை அடைந்தவுடன் நாம் நமது நோக்கத்தை அடைந்து விட்டோம். இதுவே போதும் என்று கூறுவதில்லை. மாறாக, அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய சக்தியின் அடிப்படையில் நேர்வழியில் படித்தரங்கள் இன்னும் திறந்து கொண்டே செல்லும். நேர்வழியின் படித்தரங்கள் எல்லையற்றவை ஆகும். நல்லறிவு படைத்தவர்களின் பார்வை அதன் எல்லையை ஒருபோதும் அடைய முடியாது. எனவே, அல்லாஹ் தனது அடியாருக்கு இந்த துஆவை கற்றுக் கொடுத்து அதை தொழுகையின் முக்கிய அங்கமாக ஆக்கியுள்ளான். இது தொழுகையின் ஒரு அடிப்படை அம்சமாகும். **இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம்** என்ற துஆவை மக்கள் அதன் நேர்வழியின் மூலம் பயன்பெறுவதற்கும், அதன் மூலம் ஓர் இறை கொள்கையை முழுமைப்படுத்தவும், அதிகமாக ஓதுங்கள். அல்லாஹ்வின் வாக்குறுதிகளை நினைவில் கொள்ளுங்கள். இணை வைப்பவர்களின் ஷிர்க்கிலிருந்து விலகி இருங்கள். இந்த துஆவின் சிறப்புத் தன்மைகளுள் ஒரு சிறப்பு இது மக்களின் எல்லா துறைகளையும் சூழ்ந்துள்ளது என்பதாகும்.

நேர்வழியின் படித்தரங்கள் ஒருபோதும் முடிவடைவதில்லை. ஒவ்வொரு குறிக்கோளை அடைந்ததும் புதிய குறிக்கோள் தோன்றுகிறது. இரண்டாவதாக, எல்லா வகையான மக்களும் இந்த துஆவிலிருந்து பலன்பெற முடியும். பலவீனமான ஈமான் உடையவரும் இதிலிருந்து பலன் பெறுவார். நாத்திகரும், மார்க்கம் இல்லாதவரும் இதிலிருந்து பலன்பெறுவார். இதன் மூலம் அவர் அல்லாஹ்வின் பக்கம் திரும்ப முடியும். எனவே, ஒவ்வொரு தரமுள்ள மனிதனையும் அவனுடைய முன்னேற்ற படித்தரங்களை கடப்பதற்கு உதவுகிறது. நல்லெண்ணத்துடன் துஆ வேண்டப்பட வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனுக்கும் இது துஆவாகும். இதற்கு எல்லையே இல்லை. இறைவனின் ஞானத்தைப் பெற்ற நல்லடியார்களைப் போன்று இந்த துஆவில் நிலைத்திருக்கின்றவர்கள் மிகவும் அருளுக்குரியவர்கள் ஆவர். காயப்பட்ட உள்ளத்தின் வேதனையோடும், துன்பம், துயரம் ஏற்படும்போது பொறுமையைக் கடைபிடிக்கின்ற, நிம்மதியடைந்த ஆன்மாவோடும் இந்த

துஆவைக் கேட்க வேண்டும். ஒரு வேதனையோடு இந்த துஆவை கேட்க வேண்டும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்.

இந்த துஆ எல்லா நன்மைகளையும், உறுதியையும், நிலையான ஆற்றலையும் கொண்டதாகும். இந்த துஆவில் ரப்புல் ஆலமீனாகிய இறைவன் புறமிருந்து மாபெரும் நற்செய்திகள் அடங்கியுள்ளன. அந்த நற்செய்திகள் யாவை? இதற்கு சில உதாரணங்களை உங்களுக்கு கூறுகிறேன்.

அல்லாஹ் கூறுகிறான்:

**வமன் யுஃமின் பில்லாஹி யஹ்தி கல்பஹூ** - அதாவது அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்கின்றவர்களை அல்லாஹ் நேர்வழியின் பக்கம் வழிகாட்டுகிறான்.

**வஇன் துதிஊஹு தஹ்ததூ** – நீங்கள் அவனுக்கு கட்டுப்பட்டால் நேர்வழி பெறுவீர்கள்.

இதன் முந்தைய வசனங்களின் கருத்தின்படி இங்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுதல் ஆகும். அதாவது நீங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்பட்டால் நேர்வழியைப் பெறுவீர்கள்.

ஹிதாயத் என்பது நான் முதலில் கூறியது போன்று குறிக்கோளை நோக்கி முன்னேறுதல், அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுதல் இதுவே ஹிதாயத் ஆகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுவதையும், அன்னாரைப் பின்பற்றுவதையும் அல்லாஹ்வின் விருப்பத்தையும் நேசத்தையும் பெறுவதற்கு நிபந்தனையாக்கியுள்ளான்.

ஆக, **இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம்** என்ற துஆ ஈமானில் உறுதி, நேர்வழியில் முன்னேற்றம், அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்கு மிகவும் அவசியமாகும். இதற்குப் பிறகு அல்லாஹ் இந்த துஆவை ஏற்றுக் கொண்டவாறு தனது அடியானுக்கு அருட்கொடையை வழங்குகின்றான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஸிராத்தே முஸ்தகீமின் வகைகளை விளக்கிக் கூறுகின்றார்கள்:

உண்மையான நன்மையைப் பெறுவதற்கு முயற்சி செய்வது ஸிராத்தே முஸ்தகீம் ஆகும். இதற்குப் பெயர்தான் நடுநிலை ஆகும். ஏனென்றால், செயல்ரீதியான ஓரிறைக் கொள்கை இதன் மூலமே கிடைக்கிறது. அதாவது மனிதனின் குறிக்கோளாகிய அல்லாஹ்வின் ஒருமை மனிதன் நடுநிலையை கடைபிடிக்கும்போதுதான் கிடைக்கிறது.

**தொடர்ந்து மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நன்மையைப் பெறுவதில் சோம்பேறித்தனம் காட்டுபவர் அல்லாஹ்வின் கட்டளையை குறைவாகப் பேணுகிறார். இதில் மிகவும் அதிகமாக முன்னேற முயற்சிப்பவர் அல்லாஹ்வின் கட்டளைகளில் அதிகமாக்குகிறார். உதாரணமாக, பல்வேறு செயல்பாடுகளைப் பற்றி மனிதன் விவாதிக்கின்றான். அல்லது நன்மையை வெளிப்படுத்த முயற்சி செய்கின்றான். நன்மையைச் செய்வதும் நன்மையைப் பரப்புவதும் நல்ல காரியம்தான். ஆனால், சில ஹிக்மத்தான வேளைகளில் ஜமாஅத் இந்த காரியத்தை இப்போது செய்ய வேண்டாம் என்று முடிவெடுக்கபபடுகிறது. நன்மை செய்வதில் சோம்பேறித்தனம் காட்டக்கூடாதுதான். எனினும், சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில் காலத்தின் இமாம் புறமிருந்து இப்போது இந்த காரியத்தைச் செய்ய வேண்டாம் என்ற கட்டளை பிறப்பிக்கப்படுகிறது. ஆனால், சிலர் உணர்ச்சிவசப்பட்டு முன்னால் செல்ல முயற்சி செய்கிறார்கள். தேவைக்கு அதிகமாகவே உணர்ச்சிவசப்படுகின்றனர். இதனால் அந்த ஜமாஅத்தின் பிற மக்களுக்கு கஷ்டம் ஏற்படக் காரணமாகி விடுகிறார்கள். ஹதீஸிலும் இது தொடர்பாக இவ்வாறு வருகிறது.

அல் இமாமு ஜுன்னதுன் – அதாவது இமாம் கேடயம் ஆவார். எனவே, அவருக்கு பின் நின்று அவருடைய கட்டளையின்படி செயல்பட முயற்சி செய்யுங்கள். நீங்கள் உங்கள் விருப்பப்படி உணர்ச்சிவசப்பட்டால், நன்மையைச் செய்ய வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ள போதிலும் இது

வரம்பை மீறுவதாகி விடும். நீங்கள் பலவீனத்தைக் காட்டினாலும் தவறுதான். அதே போன்று தேவைக்கு அதிகமாக உணர்ச்சிவசப்பட்டு முன்னுக்கு செல்ல முயற்சி செய்தாலும் தவறுதான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்:**

எல்லா இடத்திலும் கருணை காட்டுவது பின்தங்குவதாகும். உதாரணமாக, வழக்கமாக திருடுகின்ற ஒருவன் அல்லது வழக்கமாக குற்றம் செய்கின்ற ஒருவனை ஒவ்வொரு முறையும் மன்னிப்பது பொருத்தமற்ற செயலாகும். கருணையே காட்டாமல் இருப்பது வரம்பு மீறுவதாகும். ஒருவரை மன்னிப்பதால், அவருடைய தவறை மறைப்பதால் அவர் திருந்தலாம் என்று இருக்கின்ற நிலையிலும் மன்னிக்காமல் இருப்பதும், கண்டிப்பாக தண்டனை வழங்குவதும், தண்டனைக்காக சிபாரிசு செய்வதும் அநீதியாகும்; தவறாகும். ஏனென்றால், இதில் சந்தர்ப்ப சூழ்நிலை மதிக்கப்படவில்லை.

ஒரு காரியத்தை அதற்குரிய சரியான வேளையில் செய்வது நடுநிலையாகும். இதுவே சிராத்தே முஸ்தகீம் என்று அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு காரியத்தையும் அதற்குரிய சரியான நேரத்திலும் சரியான இடத்திலும் செய்வது தான் நடுநிலை ஆகும். இவ்வாறு தான் செய்ய வேண்டும். இதற்குப் பெயர்தான் ஸிராத்தே முஸ்தகீம் ஆகும்.

இந்த நேர்வழியைப் பெறுவது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கடமையாகும். இதற்கான துஆ அவர் தொழுகின்ற ஒவ்வொரு தொழுகையிலும் கட்டயமாக்கப் பட்டுள்ளது. நேர்வழியை எப்போதும் இறைவனிடம் வேண்டிக்கொண்டே இருக்க வேண்டும். ஏனென்றால் இதுவே ஒருவரை தவ்ஹீதில் நிலைத்திருக்கச் செய்யும். இதுவே நடுநிலையைத் தவற விடுவதிலிருந்து மனிதனைக் காப்பாற்றுகிறது. ஒரு நடுநிலையைப் பேணுவதன் பக்கம் கவனமூட்டுகிறது. ஒரு நடுநிலையான பாதையில் மனிதனைக் கொண்டு செல்கிறது. இந்த நடைமுறை மனிதனை ஓர் இறைக் கொள்கையின் பக்கம் அழைத்துச் செல்கிறது. ஏனென்றால், நேரான வழியில் நிலைத்திருப்பது அல்லாஹ்வின் பண்பாகும்.

அதாவது அல்லாஹ் எப்போதும் நேர்வழியில்தான் கிடைக்கின்றான். ஆதலால், இந்த காரியங்கள் எல்லாம் செய்தால் மனிதன் தவ்ஹீதின் பக்கம் அடியெடுத்து வைப்பான். இது தவிர ஸிராத்தே முஸ்தகீமின் உண்மைத்துவம் **ஹக்** (சத்தியம்) மற்றும் **ஹிக்மத்** (ஞானம்) ஆகும். எனவே, எந்தவொரு காரியத்தையும் சத்தியத்தோடும், ஞானத்தோடும் இறை அடியார்களிடம் செய்தால் அதன் பெயர் நற்செயலாகும். அதாவது ஸிராத்தே முஸ்தகீம் என்பது உண்மையோடு சந்தர்ப்ப சூழ்நிலையைப் பொறுத்தும் ஒரு காரியத்தை இறை அடியார்களோடு செய்தால் அதுவே நற்காரியமாகும். அதே செயல் இறைவனோடு செய்தால் அதன் பெயர் **இக்லாஸ்** (தூய்மை), **இஹ்ஸான்** (கருணை) ஆகும். இங்கு கருணை என்பதை யாரும் தவறாக புரிந்து கொள்ள வேண்டாம். இந்த இடத்தில் கருணை என்பது முழுமையான கீழ்ப்படிதல், கட்டுப்படுதல் ஆகும்.

**ஸிராத்தே முஸ்தகீம்** என்பதன் உரிமையை அல்லாஹ்வோடு பேணினால் அல்லாஹ்வோடு **இக்லாஸ்** – தூய தொடர்பு உள்ளது என்றும் அல்லாஹ்வுக்கு முழுமையான கட்டுப்படுதல் கீழ்ப்படிதல் என்பது இதற்குப் பொருள் ஆகும். இதை இறை அடியார்களோடு பேணினால் முழுமையான நன்மையாகும். இதுவே தமது உள்ளத்தோடும், ஆன்மாவோடும் பேணினால் உள்ளத்தை தூய்மைப்படுத்துதல் என்று பெயர் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள். **ஸிராத்தே முஸ்தகீம்** உரிமையை ஆன்மாவோடு பேணினால் உள்ளத்தை தூய்மைப்படுத்துதல் என்று பெயர்.

ஸிராத்தே முஸ்தகீம் என்ற சொல்லில் உண்மையான நன்மை, அல்லாஹ்வோடு தூய தொடர்பு, உள்ளத்தை தூய்மைப்படுத்துதல் ஆகிய மூன்ற பொருளும் அடங்கியுள்ளது. சத்தியம் மற்றும் ஞானம் இவைகளை அடிப்படையாக கொண்ட ஸிராத்தே முஸ்தகீம் மூன்று வகைப்படும். i) **இஸ்மி** (அறிவுசார்ந்தவை) ii) **அமலி** (செயல் ரீதியிலானவை) iii) **ஹாலி** (சூழ்நிலையின அடிப்படையில்).

இது புரிந்து கொள்வதற்கு மிகவும் கடினமானது தான். இதை கூற வேண்டாம் என்று நான் முதலில் எண்ணினேன். ஆனால், பெரும்பாலான அஹ்மதிகள் இவ்வாறான மேற்கோளை வாசிப்பதில்லை. அஹ்மதிகள் இவ்வாறான மேற்கோளை வாசிப்பதில்லை. அஹ்மதிகள அல்லாஹ்வின் அருளால் உலகம்

முழுவதும் உள்ளனர். அவர்களின மொழியில் இந்த நூல்கள் மொழிபெயர்க்கப் படவில்லை. இது மிகவும் முக்கியமான கருத்தாகும். எனவே, இதை கூற வேண்டும் என நான் விரும்புகிறேன். இந்த **இல்மி, அமலி, ஹாலி** ஆகிய மூன்றும் மேலும் மூன்று வகைப்படுகிறது.

ஒன்று, இல்மியில் அல்லாஹ்வின் உரிமை அதாவது **ஹக்குல்லாஹ்**, அடியாரின் உரிமை அதாவது **ஹக்குல் இபாத், ஹக்குன்னஃப்ஸ்** அதாவது ஆன்மாவிற்கான உரிமை ஆகிய இம்மூன்றையும் அடையாளம் கண்டுகொள்தல் வேண்டும். இது அறிவுப்பூர்வமானதாகும்.

அல்லாஹ் ஒருவன் என்று நம்புவது அல்லாஹ்வின் இல்மி ஹக் ஆகும். அறிவு நீதியிலான உரிமையாகும். அவனையே அனைத்து அருள்களின் ஊற்று, அனைத்து அழகிய பெயர்களுக்கும் உரியவன், அவனிடமே அனைத்தும் திரும்ப செல்ல வேண்டியது உள்ளது, அனைத்து குறைகளை விட்டும் தூயவன், அனைத்து சிறப்பு பண்புகளையும் கொண்டவன் முழுமையான இறைத்தன்மையை கொண்டவன், வணக்கத்திற்குரியவன் அவன் ஒருவனே ஆவான் என்று நம்புவது அல்லாஹ்வின் உரிமையில் அறிவு ரீதியிலான ஸிராதே முஸ்தகீம் ஆகும்.

அல்லாஹ்வின் கட்டளைகளை தூய்மையாக பின்பற்றுதல், கீழ்படிதல், அவனுக்கு கட்டுப்படுவதில் யாரையும் இணையாக்காமல் இருத்தல், மனிதனின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அவனிடம் மட்டுமே துஆ வேண்டுவது, அவனுடைய அன்பில் முற்றிலும் தம்மை மாய்த்துக்கொள்வது இதுவே அல்லாஹ்வோடு பேணப்படும் செயல் ரீதியிலான **ஸிராதே முஸ்தகீம்** ஆகும்.

(ஹக்குல் இபாத்) இறை அடியர்களின் உரிமையில் அறிவு ரீதியிலான **ஸிராதே முஸ்தகீம்** மனித இனம் அனைத்தும் சமமாக எண்ணுவது, இவர்கள் அனைவரும் மனிதர்கள் ஆவர் இதைவிட உயர்வு அவர்களுக்கு ஏதும் இல்லை, அனைவரும் இறைவனின் அடியார்கள். அவனே அனைவரையும் படைத்துள்ளான். இறைவன் அவர்களுக்கு வழங்கியதைவிட வேறு சிறப்பு ஏதும் அவர்களிடம் இல்லை என்று நம்ப வேண்டும், உலகில் வந்த எல்லா மனிதர்களும் அழிந்து விடுபவர்கள்தான். மனிதனின் மரணித்திற்கு பிறகு மனிதன் இவ்வுலகதொடர்பைமுற்றிலும் முடித்துவிடுகிறான். சிலர் மனிதனை அவனுடைய தகுதியைவிட உயர்த்தி விடுகின்றனர். ஆக ஒருபோதும் இறை அடியார் இறைவனாகிவிட முடியாது என்பதை நன்றாக நினைவில் கொள்ள வேண்டும். இறை அடியாருக்குள்ள அறிவு ரீதியிலான உரிமை மனிதனை அவனது சக்தியைவிட உயர்த்தாமல் இறைவனுக்கு முன்னிலையில் மனிதன் ஒரு பொருட்டே அல்ல என நம்புவதாகும்.

இங்கு மனிதர்கள் அனைவரும் ஒன்று எனக்கூறுவதன் பொருள் பெரியவர்கள் சிறியவர்களுக்கு இடையேயுள்ள வேறுபாடு அகன்றுவிட்டது என்பது அல்ல, இந்த வேறுபாடு உண்டு. ஆனால், மனிதன் என்ற ரீதியில் அனைவரும் ஒன்று. அனைவரும் சமமே. எனவே இது இறை அடியார்களோடு பேணப்படும் அறிவு ரீதியிலான தவ்ஹீத் ஆகும். ஏனென்றால் இதன் மூலம் இறைவனுடைய கண்ணியம் தான் வெளிப்படுகிறது. அடியார்களின் உரிமை பேணப்படுகிறது. ஆனால் கவனம் தவ்ஹீதின் பக்கம் செல்கிறது. நீங்கள் இவ்வாறு செயல்பட்டால் இதில் தவ்ஹீத் சிறப்பாக வெளிப்படுகிறது. ஏனென்றால் இவ்வாறு செயல்படுகின்றபோது அல்லாஹ்வைத் தவிர மற்றெல்லாம் அழியக் கூடியவை ஆகும். மனிதன் என்ற ரீதியில் யாருக்கும் யாரை விடவும் சிறப்புகள் கிடையாது. அல்லாஹ்வின் படைப்பினம் என்ற ரீதியில் அனைவரும் சம உரிமை உடையவர்கள் என்ற சிந்தனை மட்டுமே இருக்கிறது. அல்லாஹ் ஒருவனே ஆவான். அவனே அனைத்தையும் படைத்துள்ளான் என்ற சிந்தனை வெளிப்படுகிறது. இதுவே தௌஹீதாகும். இவ்வாறு ஒருவனாக இருக்கின்ற இறைவனிடம் எந்த குறையும் இல்லை அவன் தன்னில் குறைகள் ஏதுமின்றி முழுமையானவன் ஆவான். இதன் மூலம் அல்லாஹ்வின் கண்ணியம் மனிதனுக்கு தெரிகிறது.

செயல் ரீதியிலான **ஸிராத்தே முஸ்தகீம்** உண்மையான நற்செயல்களை செய்து வருவதாகும். மனிதனுக்கு உண்மையிலேயே நற்செயலாகவும், நேர்மையாகவும் இருக்கின்ற செயல்களை செய்வது செயல் ரீதியிலான தவ்ஹீத் ஆகும். தீமையின் ஒரு சிறிய சாயல் ஒரு செயலில் தென்பட்டாலும் அந்த செயலை செய்யாமல் இருக்க வேண்டும். இது செயல் ரீதியிலான தவ்ஹீதும் செயல் ரீதியிலான **ஸிராத்தே முஸ்தகீம்** ஆகும். நான் தவறான எந்த செயலையும் செய்ய மாட்டேன், அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை வைப்பேன்

என்று கூறி அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தால் தவறான வேலையிலிருந்து தப்பித்துவிடலாம் இது இறைவனின் ஒருமைத் தன்மையின் மீது மனிதனுடைய கவனத்தை திருப்புகிறது. எனவே இது அடியானின் செயல் ரீதியிலான தவ்ஹீதின் ஒப்பதல் ஆகும். ஏனென்றால் தவ்ஹீதுவாதியின் நல்லொழுக்கம் முற்றிலும் அல்லாஹ்வின் பண்புகளை அடிப்படையாக கொண்டு இருக்கும்.

**ஹக்குன்னஃப்ஸின்** – நஃப்ஸிக்காக பேணப்படும் அறிவு ரீதியிலான **ஸிராத்தே முஸ்தகீம்** இதுவாகும். உள்ளத்தில் பல பிரச்சனைகள் உருவாகிறது. குழப்பங்கள் ஏற்படுகின்றன அல்லது தவறான காரியங்கள் செய்ய தூண்டுகிறது. வெளிக்காட்டல், கர்வம், அகம்பாவம், பொறாமை, பேராசை, கஞ்சத்தனம், சோம்பேரித்தனம், அநீதி இவ்வனைத்தையும் நன்கு அறிந்து சுதாகரிப்பாக இருத்தல். இது நஃப்ஸோடு செய்யப்படும் அறிவு ரீதியான **ஸிராத்தே முஸ்தகீம்** ஆகும் இவை மனிதனை அழித்துவிடுபவை ஆகும். இவைகளை அறிந்திருத்தல் ஆன்மாவிற்கான அறிவு ரீதியான ஸிராதே முஸ்தகீம் ஆகும். தீமைகள் அனைத்தையும் உள்ளபடியே தீமைகள் என்று நம்புதல் ஆன்மாவிற்காக செய்யப்படும் அறிவு ரீதியான **ஸிராத்தே முஸ்தகீம்** ஆகும். தீமைகள் அனைத்தையும் உள்ளபடியே தீமைகள் என்று நம்புதல் ஆன்மாவிற்காக செய்யப்படும் அறிவு ரீதியான **ஸிராத்தே முஸ்தகீம்** ஆகும். இது அறிவு ரீதியான தவ்ஹீத் ஆகும். ஏனென்றால் இதன் மூலம் கண்ணியம் ஒருவனுக்கே வழங்கப்படுகிறது. அவனிடம் எந்த குறையும் இல்லை. அவன் (குத்தூஸ்) தூய்மையானவன் ஆவான்.

இந்த தீமைகளை உள்ளம் உண்மையில் தீமை என்று கருதினால் இதன் விளைவாக ஓர் இறைவனின் பக்கம் சிந்தனை செல்கிறது. மனிதனிடம் இந்த தீமைகள் எல்லாம் ஏற்பட முடியும் இதிலிருந்து விலகி இருக்க வேண்டும், விலகுவதற்கு ஓர் இறைவனை எண்ணி அஞ்சியவாறு விட்டு விலக வேண்டும். அந்த ஓர் இறைவனிடம் எந்த குறையும் கிடையாது. அவன் **குத்தூஸ்** ஆவான். அவனைத் தவிர மற்ற எல்லா படைப்பினங்களும் பலவீனமானவையே. இங்கு கூறப்பட்ட குறைகளைத் தவிரவும் பல தீமைகள் உள்ளன. இவை மனிதனிடம் காணப்படலாம். இதிலிருந்து தூய்மை பெறுவதற்கு மனிதன் அல்லாஹ்வின் பக்கம் குனிகின்றான். இதன் மூலம் இறைவனின் ஒருமை வெளிப்படுகிறது.

உள்ளத்திலிருந்து இந்த தீமைகளை முற்றிலும் நீக்கிவிடுவது உள்ளத்திடம் செய்யப்படும் செயல் ரீதியிலான ஸிராதே முஸ்தகீம் ஆகும். தீய செயல்களைவிட்டு தன்னை பாதுகாத்துக் கொள்வதும், நன்மையைக் கொண்டு உள்ளத்தை நிறைப்பதும் உள்ளத்துடன், ஆன்மாவுடன் செய்யப்படும் செயல் ரீதியிலான ஸிராதே முஸ்தகீம் ஆகும். அல்லாஹ் கூறிய நன்மை என்னும் அணிகலன்களை கொண்டு நம் உள்ளத்தை அழகு படுத்த வேண்டும். இந்த நற்பண்புகளை மேற்கொள்வது மனிதன் தனது உள்ளத்துடன் செயகின்ற செயல் ரீதியான **ஸிராத்தே முஸ்தகீம்** ஆகும்.

அல்லாஹ் கூறிய நன்மைகளை செய்து வருவது தமது நஃப்ஸிற்கான செயல் ரீதியான ஸிராதே முஸ்தகீம் ஆகும். இதுவே தவ்ஹீதின் நிலையாகும். ஒரு தவ்ஹீது வாதி தனது உள்ளத்தை அல்லாஹ் அல்லாத பிற பொய் தெய்வங்களை விட்டு தூய்மையாக வைக்கிறார். இதன் மூலம் அல்லாஹ்வின் தூய்மை என்ற உயர்ந்த பண்பை பெற வேண்டும். அதற்கும் செயல்ரீதியான **ஸிராத்தே முஸ்தகீம்** –க்கும் இடையே ஒரு நுட்பமான வேறுபாடு உள்ளது. அந்த வேறுபாடு மனிதனின் செயல் ரீதியான ஸிராத்தே முஸ்தகீம் என்பது ஒரு கலையாகும். இந்த கலையை மனிதன் பயிற்சியின் மூலம் பெறுகிறான். அதாவது இறைவணக்கத்தின் மூலம் முயற்சி செய்வது. இது வெளிப்படையாக தெரிந்தாலும் தெரியா விட்டாலும் மனிதன் தன்னை கஷ்டத்திற்கு ஆளாக்கிக் கொண்டு இடைவிடாது முயற்சி செய்வதன் மூலம் கிடைக்கிறது. அடியானுக்கு உரிய செயல் ரீதியான **ஸிராத்தே முஸ்தகீம்** ஒரு தொண்டாகும். இந்த தொண்டு உலகின் பெரும்பான்மையினருக்கு பயன் தரும்போது வெளிப்படுகிறது. அதாவது ஒரு மனிதன் பிறருடைய உரிமையை பேணும் போது அந்த தொண்டு முழுமை பெறுகிறது. ஒருவர் மற்றவருடைய உரிமையை பேண வேண்டும் என்ற அல்லாஹ்வின் கட்டளை நிறைவேற வேண்டும்.

உள்ளத்தின் செயல் ரீதியான **ஸிராத்தே முஸ்தகீம்** உள்ளத்தை தூய்மை படுத்துவதன் அடிப்படையில் அமைகிறது. இஹ்தினஸ்ஸிராத்தல்முஸ்தகீம் என்று துஆ செய்யுமாறு அல்லாஹ் கட்டளை

இடுகிறான். இந்த துஆவின் விளைவு மனிதன் தனது உள்ளத்தை தூய்மை படுத்துவதற்கு உண்மையான முறையில் முயற்சி செய்யும்போதுதான் வெளிப்படும். தனது நஃப்ஸின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பிறருக்கு தொண்டாற்றுவது அவசியமில்லை. நஃப்ஸை தூய்மை படுத்துவது ஒரு தனிமையாக வாழ்வதன் மூலமும் செய்ய முடியும். ஆனால் அடியாரின் உரிமையை ஆதமின் மக்கள் இல்லாமல் பேண முடியாது. எனவே தான் இஸ்லாத்தில் துறவறம் இல்லை என்று கூறப்பட்டுள்ளது. எனவே ஒருவர் தனது சுற்றுப்புறத்தில் வாழும், அக்கம் பக்கத்தில் வாழும் சக மனிர்களின் உரிமையை சரியாக பேணினால்தான் அவர் அடியரின் உரிமையை பேணியவர் என்று கூறப்படுவார்.

இந்த நூட்பமான வி-யங்கள் எல்லாம் நன்றாக புரிந்துவிட்டால் மனிதன் நேரான வழியில்சென்று தனது குறிக்கோளை எளிதில் அடைந்து விடலாம். இதனை புரிந்து கொள்வதற்கும், இதன் மீது செயல் படுவதற்கும் இறைவனுடைய உதவி மிகவும் அவசியமாகும். எனவே தான் இஹ்தினஸ்ஸிராத்தல்முஸ்தகீம் என்று துஆ செய்து கொண்டிருங்கள் என அல்லாஹ் கூறுகிறான்.

இந்த மேற்கோளில் அல்லாஹ்வின் விருப்பத்தை பெறுதல், அவனது ஒருமைத் தன்மையை நிலை நாட்டுதல் ஆகிய உன்னதமான நோக்கத்தை அடையவே அனைத்து நற்செயல்களும் உள்ளன என்று கூறப்பட்டுள்ளது. இதுவே உண்மையான நேர் வழியாகும். இதை பெறுவதற்கு ஒவ்வொரு முஃமினும் முயற்சி செய்ய வேண்டும்.

உள்ளங்களை ஷிர்கின் நுட்பமான வழிகளில் இருந்து தூய்மையாக வைத்திருப்பது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்.

**இஹ்தினஸ்ஸிராத்தல்முஸ்தகீம்** என்ற வசனத்தில் உள்ளங்களை ஷிர்கின் நுட்பமான வழியிலிருந்து தூய்மையாக வைத்திருக்கவும் அந்த வழியை தோற்றுவிக்கின்ற காரணிகளை அழிப்பதன் பக்கம் மிக முக்கியமாக வலியுறுத்தப் பட்டுள்ளது. எனவே அல்லாஹ் நபிமார்களின் மேன்மை மிகு படித்தரங்களை அடையவும், அந்த படித்தரங்களின் கதவு திறந்திருப்பதையும் மக்களுக்கு கூறி அதை அடைவதற்கான திறமைகளை மனிதனிடம் வைத்திருப்பதாக கூறுகிறான். ஏனென்றால் பெரும்பாலும் நபிமார்கள் மற்றும் வலிமார்களின் புகழை அளவுக்கு அதிகமாக கூறுவதனால் தான் ஷிர்க் உறுவாகிறது.

மக்கள் தங்களின் நபிமார்களுக்கு இறைவனின் பண்புகளை கொடுக்கின்றனர். இதன் காரணமாக காலப்போக்கில் அந்த நபிமார்களை இறைவனைப் போன்று வணங்க ஆரம்பித்து விட்டனர். இதன் விளைவாக அந்த நபிமார்களை அல்லாஹ்வுக்கு இணையாக்கிவிட்டனர். இவ்வாறே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வி-யத்திலும் எல்லையை மீறி புகழ்ந்ததன் காரணத்தால் கிறித்தவர்களின் உள்ளம் வழி கெட்டு விட்டது. எனவே அல்லாஹ் இந்த வசனத்தில் இதே வழிகேட்டின் பக்கம் தான் கவனமூட்டுகின்றான். அதோடு அல்லாஹ்விடம் நற்கொடைகளை பெற்ற ரஸூல், நபி, நல்லடியார்களின் பண்புகளை பின்பற்ற வேண்டும். அவர்களை சிலையாக்கி வைத்து வணங்குவதற்காக அல்லாஹ் இங்கு கூறவில்லை.

இந்த நல்லடியார்களை உலகிற்கு அனுப்புவதன் நோக்கம் அவர்களின் அழகிய பண்புகளை மக்கள் பின்பற்ற வேண்டும் என்பதனால்தானே தவிர அவர்களை சிலைகளாக வடித்து வணங்குவதற்காக அல்ல. எனவே தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கூறினார்கள் நீங்கள் வழியாகுங்கள் ஆனால் வழியை வணங்குபவர் ஆகாதீர்கள். நல்லவராகுங்கள் நல்லவர்களை வணங்குபவர் ஆகாதீர்கள். இப்போது நல்லவர்களை வணங்கும் பழக்கம் மக்கள் மத்தியில் அதிகமாக உள்ளது. சில மக்கள் இதை வியாபாரமாகக்கூட ஆக்கிவிட்டார்கள். ஒரு புத்தகத்தை திறந்து வைத்துக்கொண்டு இஸ்திகாரா செய்து சிலர் நல்ல நேரம் பார்ப்பது, சம்பந்தம் செய்து வைப்பது போன்ற காரியங்களை செய்கின்றனர். பிறகு அந்த சம்பந்தம் திருமணம் ஆனபிறகு சண்டையிட்டு பிரிந்து விட்டால் எங்கள் இஸ்திகாரா சரியாகத்தான்இருந்தது உங்கள் மீது தான் குற்றம் என்று கூறிவிடுகின்றனர். இவர்கள் துஆ செய்வது கிடையாது. இறைவன் பக்கம் இவர்கள் கவனம் செலுத்துவதில்லை. தொழுகைகளைப் பேணுவதில்லை. மார்க்கத்தை வியாபாரமாக்கி இருக்கின்ற இவர்களின் மீது குருட்டுத்தனமாக நம்பிக்கை வைக்கின்றனர். அஹ்மதிகள் இவ்வாறாக செயல்களிலிருந்து குறிப்பாக விலகி இருக்க வேண்டும்.

இந்த வசனத்தில் சிந்தனை உடைய மக்களுக்கு அல்லாஹ் கூறுகிறான். நபிமார்களின் தரம் மிகவும் உயர்ந்ததாகும். அல்லாஹ் மிகவும் தூயவன் ஆவான் அவனது பண்புகளில் அவனுக்கு நிகர் யாரும் இல்லை. ஆனால் நபி இவ்வாறு கிடையாது. நபிமார்களை உண்மையாக பின்பற்றுபவர்களில் இருந்து அல்லாஹ் அவர்களின் வாரிசுகளை உருவாக்குகின்றான். எனவே, அவர்களின் உம்மத்து அவர்களுக்கு வாரிசாகும். அந்த உம்மத்தின் நபிக்கு கிடைத்தது எல்லாம் அவர்களுக்கும் கிடைக்கிறது. இதற்கு நிபந்தனை அவர்கள் அவரை முழுமையாக பின்பற்றுபவர்களாக இருக்க வேண்டும் என்பதாகும். இதைத் தான் அல்லாஹ் **குல் இன் குன்தும் துஹிப்பூனல்லாஹா ஃபத்தபிஊனி யுஹ்பிப்குமுல்லாஹ்** என்ற வசனத்தில் கூறுகிறான். இந்த துஆ தவ்ஹீதின் பக்கம் கொண்டு செல்கிறது.

இஸ்லாத்திற்கு இஸ்திகாமத் என்ற பெயர் உண்டு (அதாவது நிலைநிற்றல், உறுதிப்பாடு) என்று அல்லாஹ் கூறுகிறான். திருக்குர்ஆனில் அல்லாஹ் இதற்கு இஸ்திகமத் என்று பெயர் சூட்டியுள்ளான். அவன் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம் என்று துஆ கற்றுத் தருகிறான். அதாவது இறைவா எங்களுக்கு நிலையான உறுதியான வழியைக் காட்டுவாயாக. உன்னிடம் அருட்கொடைகளைப் பெற்ற மனிதர்களின் வழியைக் காட்டுவாயாக.

ஒரு பொருளின் நிலைப்பாடு அதன் நோக்கத்தை கருத்தில் கொண்டு கணக்கிடப்படுகிறது. எனவே, மனிதனின் நிலைப்பாடு, மனிதன் அல்லாஹ்விற்காக படைக்கப்பட்டுள்ளான் என்பதால் அவனது படைப்பின் நோக்கமும் அதுவே ஆகும். அதாவது மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கம் அல்லாஹ்வுக்காகவே ஆகும். மனிதன் முழுமையாக கட்டுப்படுவதற்காகவே படைக்கப்பட்டுள்ளான். எனவே, அவன் அவ்வாறே இறைவனுக்காக ஆகிவிட வேண்டும். மனிதன் தனது அனைத்து சக்திகளுடனும் இறைவனுக்காகவே ஆகிவிடும்போது இறைவனது அருள் அவன் மீது இறங்கும். இந்த நிலையை இன்னொரு சொல்லில் தூய வாழ்வு என்று கூறலாம். சூரியனின் பக்கம் ஜன்னலைத் திறந்தால் சூரிய ஒளி கண்டிப்பாக ஜன்னல் வழியாக வந்து விடும். அவ்வாறே மனிதன் முழுமையாக அல்லாஹ்வுக்காக ஆகி விட்டால் அல்லாஹ்வின் அருட்கொடை மனிதனுக்கு கிடைக்கிறது.

இந்த தூய வாழ்க்கையை இவ்வுலகிலேயே பெற்று விட வேண்டும். இதையே அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான். **மன்கான ஃபீ ஹாஸிஹி அஃமா வஹுவ ஃபில் ஆகிரத்தி அஃமா. வ அழல்லுஸ் ஸபீலா** – இவ்வுலகில் இறைவனை காண்பதற்கு ஒளி கிடைக்காமல் குருடராக இருப்பவர் மறுமையிலும் குருடராகவே இருப்பார்.

ஆக, இந்த தீமைகள் எல்லாம் முயற்சி செய்யாமல் ஒரே நொடியில் தூய்மை ஆவதில்லை. திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுவது போன்று இதற்கு இடைவிடாத முயற்சி தேவை, துஆ செய்வது அவசியம். அப்போது தான் இறைவனின் செயல் வெளிப்படும். அது திடீர் என்று மனிதனை தனது ஒளியால் ஆக்ரமித்துக் கொள்கிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

மனிதனின் குறிக்கோள் நிலைநிற்றல் ஆகும். **இஸ்மே அஃழம்** என்பதன் பொருள், மனிதனுக்கு உயர்ந்த படித்தரங்கள் கிடைக்கின்ற வழியே ஆகும். இதுவே மனிதனின் குறிக்கோளாகும். அல்லாஹ் **இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம்** என்ற துஆவில் இதன் பக்கமே கவனமூட்டியுள்ளான்.

எனவே, மனிதனில் காணப்படும் எல்லையில்லாத உயர்ந்த படித்தரங்களை ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு மூஃமினும் தத்தமது தகுதிக்கேற்ப அடைய முயற்சி செய்ய வேண்டும். இதுவே **இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம்** –ல் காணப்படும் பரந்த கருத்துக்கள் ஆகும். இதற்காக துஆ செய்து கொண்டு இருக்க வேண்டும்.

இந்த துஆவை செய்வதன் முக்கியத்துவத்தை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள். அதுமட்டுமின்றி இந்த துஆவை எவ்வாறு பெருக்கிக் கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறார்கள்.

துஆ தொடர்பாக ஒரு விஷயத்தை நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது அல்லாஹ் சூரா ஃபாத்திஹாவில் **இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம்** என்ற துஆவை கற்றுத் தந்துள்ளான். இதில் மூன்று அம்சங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். ஒன்று, அனைத்து மனித இனத்தையும் இதில் இணைத்துக் கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, முஸ்லிம்கள் அனைவரையும் இதில் இணைத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ் அவர்களையும் நேரான வழியில் நடத்துவானாக.

மூன்றாவதாக, ஜமாஅத்தில் இணைந்துள்ள அனைவரையும் இந்த துஆவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆக, இவ்வாறு மனித இனம் முழுவதும் இதில் இணைந்து விடும். இறைவனின் நோக்கமும் இதுவே ஆகும். ஏனென்றால் இந்த அதிகாரத்தில் அவன் இந்த துஆவிற்கு முன் தனது பெயரை **ரப்புல் ஆலமீன்** என்று வைத்துள்ளான். அது பொதுவாக இரக்க குணத்தை ஊட்டுகிறது. இதில் பிற உயிரினங்களும் அடங்கும். அதன் பிறகு தனது பெயரை ரஹ்மான் என வைத்துள்ளான். இந்த பெயர் மனித இடத்தின் மீது பரிதாபம் காட்டத் தூண்டுகிறது. ஏனென்றால் ரஹ்மத் என்பது மனிதனுக்காக மட்டும் கூறப்படும் ஒன்றாகும். இதன் பிறகு தனது பெயரை ரஹீம் என வைத்துள்ளான். இந்த பெயர் முஹம்மத் உடன் குறிப்பாக தொடர்புடையது. எனவே இது முஹம்மதின் கருணையை சிறப்பாக தூண்டுகிறது. இதன் பிறகு தனது பெயரை மாலிக்கி யவ்மித்தீன் – தீர்ப்பு நாளின் எஜமான் என வைத்துள்ளான். இந்த பெயர் ஜமாஅத்தின் மீது காட்ட வேண்டிய பரிவை தூண்டுகிறது. ஏனென்றால் தீர்ப்பு நாளின் போது அல்லாஹ்வின் முன்னிலையில் ஜமாஅத்துள் ஆஜராக்கப்படும். ஆகவே, இந்த விளக்கத்தின் அடிப்படையில் **இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம்** என்ற துஆ உள்ளது. இந்த துஆவில் மனித இனம் அனைத்தின் மீதும் இரக்கம் காட்ட வேண்டும் என உள்ளது. அனைவருக்கும் நன்மையை நாட வேண்டும். இதுவே இஸ்லாத்தின் கருவூலமாகும்.

நாம் காட்ட இவ்வனைத்து நல்ல விஷயங்களும் நாம் உலகின் நேர்வழிக்காக துஆ செய்ய வேண்டும் என்பதை நம்மிடம் வேண்டுகிறது. அதுமட்டுமல்ல முஸ்லிம்களின் நேர்வழிக்காவும் நாம் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. இறைவனை மறந்து விட்டு இன்றைய உலகம் போய் கொண்டிருக்கிறது. ஒரு நாடு மற்ற நாடுகளோடு வெளிப்படையாக இல்லா விட்டாலும் உள்ளூர எதிர்ப்பு நிலவுகிறது. ஒருவர் மற்றவருக்கு இழப்பு ஏற்படுத்த முயற்சித்து வருகிறது. மிக வேகமாக உலகப் போரை நோக்கி இன்றைய உலகம் சென்று கொண்டிருக்கிறது. இதனால் மனித நேயம் அழிந்துவிடக்கூடும். எனவே நாம் இந்த துஆவை குறிப்பாக வேண்ட வேண்டும். இந்த போரின் தீய விளைவுகளிலிருந்தும் தீய அழிவுகளிலிருந்தும் அல்லாஹ் ஜமாஅத்தையும் முஸ்லிம் உம்மத்தையும் பாதுகாப்பானாக. அனைத்து மனித இனத்தையும் பாதுகாப்பானாக.

ஒரு வகையில் பார்த்தால் இப்போது உலகம் நெருப்புக் கிடங்கின் ஓரத்தில் நிற்கிறது. எந்த நேரமும் இந்த கிடங்கு கீழே விழலாம். அப்போது ஒரு பயங்கரமான அழிவு வரப்போகிறது. எனவே மிக அதிகமாக துஆ செய்ய வேண்டும். இதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்துங்கள். இன்று உலகை யாராவது காப்பாற்ற முடியும் என்றால் அஹ்மதிகள் தான் தமது துஆவினால் காப்பாற்ற முடியும். அஹ்மதிகள் தான் உண்மையான மூஃமின்கள் ஆவர். இந்த ஜமாஅத்தான் மஸீஹ் மவ்வூதின் ஜமாஅத் ஆகும். எனவே, சிறப்பாக முயற்சி செய்தவாறு உங்கள் மத்தியில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்துங்கள். உலகின் அழிவை மனதில் கொண்டவாறு குறிப்பாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 13.02.2009

Translated by : Maulavi S. ABDUL QADIR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456